# குழந்தைகளுக்கு வேதாகமம்

வழங்குபவர்



# சபையின் பிறப்பு

எழுதியவர்: Edward Hughes

சித்தரிப்பவர்: Janie Forest

தழுவியவர்: Ruth Klassen

மொழிபெயர்ப்பாளர்: Rev. Dr. Dasan Jeyaraj

உருவாக்குபவர்: Bible for Children
www.M1914.org

©2014 Bible for Children, Inc.
உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.



இயேசு மரித்தபோது, பயத்தினாலே அவரைப் பின்பற்றி சென்றவர்கள் ஒளிந்து கொண்டார்கள். இயேசு உயிரோடு எழும்பிய பின், தன்னுடைய சீஷர்களுக்கு தன்னைக் காண்பித்தார். இயேசு உயிரோடு இருக்கிறார்! ஆனால் -

இயேசுவோ அவர்களை விட்டுவிட்டு தான் எப்பொழுதும் வாழ்ந்து கொண்டிருந்த பரலோகத்தில் தன்னுடைய பிதாவிடம் திரும்பிச் செல்ல திட்டமிட்டிருந்தார்.



ஆனால்
அதற்கு
முன்னால்,
தன்னை
பின்பற்றியவர்களை
ஆறுதல்படுத்தி உதவி செய்ய
தேவனுடைய ஆவியானவரை அனுப்ப
போவதாக வாக்குத்தத்தம் பண்ணினார் (யோவான்
15:26). நேரம் சமீபமாயிருக்கிறது. இயேசு சென்ற சில
நாட்களில், பரிசுத்த ஆவியாகிய தேவன் வந்தார்.

அது இப்படியாக நடந்தது. இயேசுவை பின்பற்றின சுமார் 120 பேர் ஒரு வீட்டில் கூடி ஜெபித்துக் கொண்டிருந்தார்கள். திடீரென, அந்த வீடு பலத்த காற்று வீசுகிற சத்தத்தால் நிரம்பியது.



எரிகிற அக்கினி மயமான நாவுகள் அவர்கள் ஒவ்வொருவர் மேலும் அமர்ந்தது.  அவர்கள் எல்லோரும் பரிசுத்த ஆவியினால் நிரம்பினார்கள் - இயேசு வாக்குத்தத்தம் பண்ணினது போலாயிற்று!



தெருக்களிலே போய், தாங்கள் இதுவரை கற்றுக்கொள்ளாத பாஷைகளிலே பேச ஆரம்பித்தார்கள், வெளி நாட்டிலிருந்து எருசலேமை காண வந்த ஜனங்கள் தேவனுடைய மகத்தான செயல்களை பலப்பல பாஷைகளிலே பேசுவதை கேட்டார்கள்.



பார்வையாளர்கள் வியந்து போனார்கள். "இது என்னவாயிருக்கும்?" என்று கேட்டார்கள். "அவர்கள் புது மதுபானத்தினாலே நிறைந்திருக்கிறார்கள்," என்று சிலர் கிண்டல் செய்தார்கள்.



ஆனால் பேதுரு சொன்னான்,

"அவர்கள் குடித்து வெறிக்கவில்லை ...

இதைப்பற்றிதான் யோவேல் தீர்க்கதரிசி

சொல்லியிருக்கிறான் ..."

பரிசுத்த ஆவியானவர்

வந்து ஜனங்களை

ஆசீர்வதித்து, ...



... உதவி செய்வார் என்று பல வருடங்களுக்கு முன்னால் தேவன் கொடுத்த வாக்குத்தத்தை பேதுரு அவர்களுக்கு ஞாபகப்படுத்தினான்.



அவர்கள் பாவங்களை விட்டு திரும்பி இயேசுவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற வேண்டுமென்று பேதுரு ஜனங்களுக்குச் சொன்னான். "... அப்பொழுது நீங்கள் பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்," என்று பேதுரு சொன்னான், ஏறக்குறைய 3000 பேர் கீழ்ப்படிந்தார்கள்.



இயேசுவை வழிபடுவர்களாக அவர்கள் சீஷரோடு சேர்ந்தார்கள். நாட்கள் செல்லச்செல்ல, பரிசுத்த ஆவியானவர் வந்த நாளிலே தேவன் ஆரம்பித்த சபையிலே ஜனங்கள் மேலும் மேலும் சேர்ந்தார்கள்.



தேவனுடைய பிள்ளைகளின்
வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவர் பலத்தை
கொண்டுவந்தார்.  ஒரு நாள், பேதுருவும்
யோவானும் சேர்ந்து ஜெப வேளைக்காக
தேவாலயத்திற்குச் சென்றார்கள்.  அலங்கார
வாசலண்டையில் சப்பாணியாய் ஒருவன்
பிச்சையெடுத்துக் கொண்டிருந்தான்.
அவன் பேதுரு மற்றும்
யோவானிடத்தில்
பிச்சைக் கேட்டான்.





பின்பு பேதுரு சொன்னான், "வெள்ளியும் பொன்னும் எங்களிடத்திலில்லை, ஆனால் என்னிடத்தில் உள்ளதை உனக்கு கொடுக்கிறேன். நசரேயனாகிய இயேசுவின் நாமத்தில், எழுந்து நட," தன்னுடைய வலது கையினாலே அவனை பிடித்து தூக்கிவிட்டான். ஆகையால் அவன் குதித்து, எழுந்து, அவர்களுடன் தேவாலயத்திற்குள்ளாக - நடந்து, குதித்து, தேவனை துதித்துக் கொண்டு சென்றான்.

அற்புதத்தை பார்த்து வியந்து, ஒரு பெரிய கூட்ட ஜனங்கள் கூடினார்கள். சப்பாணியாய் இருந்த மனுஷனை, தேவனுடைய வல்லமையேயன்றி, தங்களுடையதல்லவென்று, பேதுரு அவர்களிடம் கூறினான்.



தேவன் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினார் என்று கூடியிருந்த யூதர்களை ஞாபகப்படுத்திய போது, தேவாலயத்து தலைவர்கள் கோபப்பட்டு பேதுருவையும் யோவானையும் பிடித்து சிறைச்சாலையிலே அடைத்தார்கள். ஆனாலும், ஏறக்குறைய 5000 மனிதர்கள் இயேசுவை விசுவாசித்தார்கள்.



அடுத்த நாள், பேதுருவும் யோவானும் தேவாலயத்தை ஆட்சி செய்கிறவர்கள் முன்பு நின்றார்கள். "நீங்கள் எந்த வல்லமையினாலே அல்லது எந்த நாமத்தினாலே இதைச் செய்தீர்கள்?" என்று அதிகாரிகள் கேட்டார்கள். உடனே



பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவனாய், பேதுரு தைரியமாக பதில் சொன்னான்.

"... உங்களால் சிலுவையில் அறையப்பட்டவரும், தேவனால் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவருமாயிருக்கிற நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலேயே இவன் உங்களுக்கு முன்பாகச் சொஸ்தமாய் நிற்கிறான்."





பயமில்லாமல் பேதுரு தொடர்ந்து
பேசினான், "... நாம் இரட்ச
ிக்கப்படும் பறூக்கு
வானத்தின் கீழெங்கும்
மனுஷர்களுக்குள்ளே
அவருடைய
நாமமேயல்லாமல்
வேறொரு நாமம்
கட்டளையிடப்படவும்
இல்லை."



ஜனங்கள் இயேசுவை
விசுவாசிக்கக் கூடாது
என்பதற்க்காக, அதிகாரிகள்
பேதுருவையும்
யோவானையும் அதிகமாக
பயமுறுத்தினார்கள்.
"இயேசுவின் நாமத்தைக்
குறித்து எவ்வளவும்
பேசக்கூடாது."



ஒருமுறை
இயேசுவுக்காக
நிற்க பேதுரு
பயந்திருந்தான்.
ஆனால் அது
பரிசுத்த
ஆவியானவர்
வருவதற்க்கு
முன்னால்.
ஆனால் இப்போது
யாராலும் அவனை
பயமுறுத்த
முடியாது.



பேதுருவும்
யோவானும்
பதிலளித்தார்கள்,
"தேவனுக்குச் செவ
ிகொடுக்கிறதைப்
பார்க்கிலும்
உங்களுக்குச்
செவிகொடுக்கிறது
தேவனுக்கு முன்பாக
நியாயமாிருக்குமோ
நீங்களே நிதான
ித்துப்பாருங்கள்.



நாங்கள்
கண்டவைகளையும்
கேட்டவைகளையும்
பேசாமலிருக்கக்கூடாதே."